கட்டடங்களிலே இயங்குகிற மையங்கள் எத்தனை? கட்டடம் இல்லாமல் இயங்குகிற மையங்கள் எத்தனை? அவற்றுக்குச் சிறப்பு நிதி ஒதுக்கி தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா அங்கன்வாடி மையங்களுக்கும் புதிய கட்டடங்களைக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதையும் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50,433 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டுவருகின்றன. அதில் சொந்தக் கட்டடத்தில் 30,933 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதுபோக வாடகைக் கட்டடத்தில் 9,299 கட்டடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, கடந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து ரூ.10 இலட்சத்தில், குழந்தைகள் நல மையக் கட்டடங்கள் கட்டும் பணிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் விதித்த வழிகாட்டி விதிமுறைப்படி இப்போது அனைத்து மையங்களுக்கும் படிப்படியாக கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

மீன் பதனிடும் தொழிற்கூடம்

***46605—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் மீன் பதனிடும் தொழிற்கூடம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 8]

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, மாமல்லபுரம் அருகில் அமைந்துள்ள கடல் மீன்பிடி கிராமங்களில் மீனவ மக்கள் கட்டுமரங்கள் மற்றும் கரையேற்றும் படகுகள்மூலமாகவே மீன் பிடிக்கின்றார்கள். பெரிய அளவிலான விசைப் படகுகள்மூலம் இப்பகுதியில் மீன்பிடிப்பு செய்வதில்லை. அன்றாடம் பிடிக்கப்படுகின்ற மீன் வகைகள் அனைத்தும் கரை சேர்ந்ததும் உடனே விற்பனை செய்யப்படுகின்றன. மீன் பதனிடுவதற்கு ஏற்றவாறு உரிய மீன்கள் மிஞ்சுவதில்லை. எனவே, மாமல்லபுரம் அருகில் மீன் பதனிடும் தொழிற்கூடம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தைச் சுற்றி ஏராளமான மீனவ கிராமங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக வெண்புருஷம், தேவநேரி, கொக்கலமேடு, இளந்தோப்பு, பட்டிகுளம், பேரூர், நெம்மேலி, மெய்யூர், சதுரங்கப்பட்டினம், புதுப்பட்டினம், ஓய்யாலிகுப்பம் போன்ற பல்வேறு மீனவ கிராமங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இங்கே ஆயிரக்கணக்கானவர்கள் மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கிறார்கள். அங்கே தினந்தோறும் விற்கின்ற மீன்களைப் பதப்படுத்திவிட்டால் தங்களால் கூடுதலாகப் பொருளாதார ரீதியாக முன்னேற முடியும் என்று கோரிக்கை வைக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், விற்பனை செய்யாத சமயங்களிலே கருவாடாக மாற்ற வேண்டுமென்று சொன்னால், தங்களுக்கு அந்தப் பகுதியிலே உலர் களமும், இதுபோன்று பதனிடும் தொழிற்சாலையும் தேவையென்று கேட்கிறார்கள். எனவே, நம்முடைய அரசு மீண்டும் இதுகுறித்து பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே கூறிய கருத்துக்கிணங்கத்தான் சுனாமியால் பாதிக்கப்பட்ட நம்முடைய

[2009 ஜூலை 8

தமிழக மீனவ மக்களுக்கு 110 கோடி ரூபாய் செலவில் நம்முடைய வரலாற்று முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள், உயிர்காக்க கவச உடைகள், சைக்கிள்கள், வலைகள், மறு ஒளியூட்டிய விளக்குகள் மற்றும் ice box–கள் வழங்கியிருக்கின்றார்கள். அருகிலேயே நம்முடைய காசிமேடு மீன்பிடி துறைமுகம் இருக்கின்றது. அன்றாடம் பிடிக்கப்படுகின்ற மீன்கள், நான் ஏற்கெனவே பதிலில் கூறியபடி ஆங்காங்கே இருக்கின்ற மக்களுக்குத் தேவையான அளவிலே இருக்கின்ற காரணத்தால், ஆங்காங்கே விற்று முடிக்கப்படுகின்றன. மீதப்படுகின்ற கொஞ்சம் மீன்கள்கூட, நம்முடைய முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள் வழங்கியிருக்கக்கூடிய அந்த ice box–கள்மூலமாக, சிறிய அளவிலே மீதப்படுகின்ற மீன்கள் அதிலே பதப்படுத்தப்பட்டு மறுநாள் விற்பனை செய்யப்படுகின்றன. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப் பகுதியிலே அதிக மீன்கள் கிடைக்க வாய்ப்புகள் இருக்குமேயானால் அரசு, மீன் துறை அதிகாரிகளை வைத்து அந்தப் பகுதியிலே ஆய்வு நடத்தி அதற்கான முடிவினை நம்முடைய முதல்வர் கலைஞர் ஐயா அவர்களோடு ஆலோசித்து எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, மாமல்லபுரம், மீனவர் பகுதியிலே எல்லாம் கடல் சீற்றத்தால் ஏற்படும் மிகப் பெரிய கொந்தளிப்புக்கிடையே அந்தப் பகுதி மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே கடல் அலைகளின் தன்மைகளையும், இனியும் இதுபோன்ற கடல் அரிப்புகள் ஏற்படுகின்ற வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றியெல்லாம் மீன் வளத் துறைமூலம் அங்கு ஏதாவது ஆய்வு செய்யப்படுகிறதா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தால், குறிப்பாக கடல் சீற்றத்தால் மீனவர்கள் புயல், சுனாமி போன்ற காலங்களில் பாதிக்கப்படுகின்ற காரணத்தால்தான் சுனாமி துயர்த் துடைப்புக் கூட்டங்களை, 5 முறை நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆணைக்கிணங்க, நடத்தி

2009 ஜூலை 8]

இதுபோன்ற இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படுகின்ற நேரத்தில், அதற்கான தடுப்புப் பணிகளை எப்படிச் செய்ய வேண்டுமென்று அரசு அதிகாரிகளோடு நம்முடைய கலைஞருடைய அரசு ஆலோசித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

பால் குளிரூட்டும் நிலையங்கள்

***29459—திரு. கோ. அரி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, மணவாள நகர், பேரம்பாக்கம், திருவாலங்காடு, திருத்தணி ஆகிய பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி தொகுதியிலுள்ள மணவாள நகர், பேரம்பாக்கம், திருவாலங்காடு, திருத்தணி ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் 35 கி.மீ. தூரத்தில் உள்ள திருவள்ளூர் அருகில் காக்களூரில் 50,000 லிட்டர் திறன்கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.*

திரு. கோ. அரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிப்பவர்கள் பெரும்பாலும் பால் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். அந்தப் பகுதியிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பால், சில நேரங்களில் 35 கி.மீ., 40 கி.மீ. தூரம் எடுத்துச்செல்ல வேண்டிய சூழ்நிலையில்,*